**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**DW1 – OS. No. 250/2017**

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கோவிந்தராஜ் | தொழில் : |
| த/பெ. : திரு, வெங்கடபதி | வயது : 59 |
| முகவரி : | |

**பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். நீதித்துறை குற்றவியல் நடுவர் எண் 2 முன்பு தாக்கல்செய்த CMP No.4378/15 ல் மனு மற்றும் அதனுடன் இணைந்த பிரமாண பத்திரிக்கை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 8ஆக குறியீடு செய்யப்படுகிறது.திருப்பூர் மாநகர குற்ற பிரிவு குற்ற எண் 7/15 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 9ஆக குறியீடு செய்யப்படுகிறது.திருப்பூர் மாநகர குற்ற பிரிவு குற்ற எண் 7/15 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 10ஆக குறியீடு செய்யப்படுகிறது.நீதித்துறை குற்றவியல் நடுவர் எண் 2 முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆண்டு பட்டிகை வழக்கு எண் 378/2016 ல் தாக்கல் செய்யபப்ட்ட ஆட்சேபணை மனு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 11ஆக குறியீடு செய்யப்படுகிறது எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.